# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 77 — 1973 සැප්තැම්බර් 14 වැනි සිකුරාදා — 1973.09.14

77 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 959 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 963 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


*கவனிக்க.*—நீதி நிருவாகம் சட்டமூலமும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

(அ) காய்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பாற்பண்ணையினதும் வேளாண்மையினதும் உற்பத்திப் பொருட்கள் ஆகியனவற்றை கொழும்பிலும், தியத்தலாவையிலுமுள்ள இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை ஆகியனவற்றின் தாபனங்களுக்கும், பனாகொடையிலுள்ள இலங்கைத் தரைப்படைக்கும் ;

(ஆ) புதிய மீன்களை தியத்தலாவையிலுள்ள இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை ஆகியனவற்றின் தாபனங்களுக்கும், பனாகொடை, தள்ளடி (மன்னார்), தோட்டவெளி (மன்னார்) ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைக்கும் ;

1974 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலவெல்லைக்கு விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தில், கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 8 ஆந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்,

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் திருப்பிக் கொடுபடற்பாலதான கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி காலை 10 மணி வரை இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தினால் வழங்கப்படும். மேலும் விவரங்களை கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எம் ஏ. ஜயவீர,
பிறிகேடியர்,
பதில் இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ஸ மாவத்தை,
அ. அ. பெட்டி எண் 553,
கொழும்பு 3,
1973, ஒகத்து, 28 ஆந் திகதி.

9-313/1—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

(அ) இறைச்சியை கொழும்பிலும், தியத்தலாவையிலுமுள்ள இலங்கைத் தரைப்படை, இலங்கைக் கடற்படை, இலங்கை வான்படை ஆகியனவற்றின் தாபனங்களுக்கும், பனாகொடையிலுள்ள இலங்கைத் தரைப்படைக்கும் ;

(ஆ) காய்கறிகள், பழங்கள், தேங்காய்கள் பாற்பண்ணையினதும் வேளாண்மையினதும் உற்பத்திப் பொருட்கள், இறைச்சி, புதிய மீன்கள் ஆகியனவற்றை பிரிவு எண் 18, இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம், கந்தளாய், யாழ்ப்பாணம், ஆனையிறவு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தாபனங்களின் சி. ஏ. பி. சி. படை வகுப்புகளுக்கும் ;

(இ) காய்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பாற்பண்ணையினதும் வேளாண்மையினதும் உற்பத்திப் பொருட்கள், இறைச்சி ஆகியனவற்றை தள்ளாடி (மன்னார்), தோட்டவெளி (மன்னார்) ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தாபனங்களுக்கும் ;

1974 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலவெல்லைக்கு விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தில், கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 8 ஆந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் திருப்பிக் கொடுபடற்பாலதான கேள்விப் பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.) இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 4 ஆந் திகதி நண்பகல் 12 மணிவரை கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தினால் வழங்கப்படும்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
பதில் இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ஸ மாவத்தை,
அ. அ. பெட்டி எண் 553,
கொழும்பு 3,
1973, ஓகத்து, 28 ஆந் திகதி.

9-313/2—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

காய்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பாற்பண்ணையினதும் வேளாண்மையினதும் உற்பத்திப் பொருட்கள், இறைச்சி, புதிய மீன்கள் ஆகியவற்றை சிலாவத்துறை, அம்பாறை, அநுராதபுரம், நுவரெலியா, உடவளவை, பதவிய ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தாபனங்களுக்கு 1974 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு, திசெம்பர் மாதம், 31 ஆந் திகதிவரையுள்ள காலவெல்லைக்கு விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தில், கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 9 ஆந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கு திருப்பிக்கொடுபடற்பாலதான கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம், 4 ஆந் திகதி காலை 10.30 மணி வரை இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தினால் வழங்கப்படும்.

மேலும் விவரங்களை கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
பதில் இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ஸ மாவத்தை,
அ. அ. பெட்டி எண் 553,
கொழும்பு 3,
1973 ஓகத்து, 28 ஆந் திகதி.

9-313/3—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

### இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்

காய்கறிகள், பழங்கள், தேங்காய்கள், பாற்பண்ணையினதும் வேளாண்மையினதும் உற்பத்திப் பொருட்கள், இறைச்சி, புதிய மீன்கள் ஆகியனவற்றை செம்பன்குண்டு, கேகாலை, கண்டி, பூஸ்ஸ, காத்தறை, மஹியங்கனை, வெள்ளவாய ஆகிய இடங்களிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தாபனங்களுக்கு 1974 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு, திசெம்பர் மாதம், 31 ஆந் திகதிவரையுள்ள காலவெல்லைக்கு விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தில், கேள்விச் சபைத் தலைவரால் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கு திருப்பிக்கொடுபடற்பாலதான கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 75/- (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தின் தலைமைக் கணக்காளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விநியோகங்களுக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு, ஒற்றோபர் மாதம், 4 ஆந் திகதி காலை 10.30 மணி வரை இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்தினால் வழங்கப்படும்.

மேலும் விவரங்களை கொழும்பு, பாலதக்ஸ மாவத்தையிலுள்ள இலங்கைத் தரைப்படைத் தலைநிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
பதில் இலங்கைத் தரைப்படைத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
பாலதக்ஸ மாவத்தை,
அ. அ. பெட்டி எண் 553,
கொழும்பு 3,
1973 ஓகத்து, 28 ஆந் திகதி.

2-313/4—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

மாங்குளம் காணி அபிவிருத்தி அலுவலக வளவிலுள்ள பண்டகசாலையில் இருக்கும் கீழ்த்தரப்பட்டுள்ள பாவனையினின்று கழிக்கப்பட்ட பொருட்களை வாங்கி அப்புறப்படுத்துவதற்கான கேள்விகள் காணி அபிவிருத்தி அதிகாரி, மாங்குளம் அவர்களால் 4.10.73 நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நிரல் விபரம்.

1. வெற்று சீமெந்து உறைகள்—5000 (கிட்டத்தட்ட)
2. பழைய புதினத் தாள்கள்—1,722 இறுத்தல் (கிட்டத்தட்ட)
3. பாவனையினின்றும் நீக்கப்பட்ட பல இனப் பொருட்கள்.

2. கேள்விகள் நிபந்தனையற்றனவாயும் நிலையானவையாயும் இருத்தல் வேண்டும். கேள்விகேட்க விரும்புவோர் விரும்பின் வேலை நேரத்தில் காணி அபிவிருத்தி அலுவலக மாங்குள வளவிலுள்ள பண்டகசாலையில் மேற்கூறிய பொருட்களை பார்வையிடலாம்.

3. கேள்விகள் மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியிடம் 29.9.73 நண்பகல் 12 மணிவரை பெறக்கூடிய படிவ இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். கேள்விப்படிவங்கள் மாங்குளம் காணி அபிவிருத்தி அலுவலகத்திலோ அல்லது ஏதாவது ஒரு கச்சேரி நிலையத்திலோ வைப்புப் பணமாக 25/- ரூபா கட்டி அதற்கான பற்றுச்சீட்டின் பேரில் வழங்கப்படும்.

4. கேள்விகள் யாவும் முத்திரையிடப்பட்டு, "பாவனையிலிருந்து கழிக்கப்பெற்ற வெற்று சீமெந்து உறைகள் வாங்குவதற்கான கேள்வி" என தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பிடல் வேண்டும் அல்லது மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியின் அலுவலக அறையினுள் இருக்கும் கேள்விப் பெட்டியுள் போடப்படல் வேண்டும்.

5. கேள்விகள் 4.10.73 பிற்பகல் 2 மணிக்கு மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரியின் அலுவலக அறையில் திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பின் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்கலாம்.

6. கேள்விதாரர் ஒன்றிற்கோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிரலின் பொருட்களுக்கு கேள்விகள் அனுப்பலாம். ஒவ்வொரு நிரலிலுள்ள கேள்வியின் தொகையும் வெவ்வேறாக தரப்படல் வேண்டும். கேள்விப் படிவங்களில் கேட்கும் தொகை இலக்கத்திலும் சொற்களிலும் எழுதப்படல் வேண்டும். எழுத்துக்களுக்கும் சொற்களுக்கும் வித்தியாசமிருப்பின் அல்லது கேள்விப்படிவம் நிரப்பும்போது படிவத்திலுள்ள விபரங்கள் கூட்டியோ குறைத்தோ நிரப்பப்படின் அக்கேள்விகள் புறக்கணிக்கப்படஏதுவாகும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர், கேட்ட முழுத் தொகையையும் வேண்டப்படும் நாளிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தி, பணம் செலுத்தும் நாளில் இருந்து 14 நாட்களுள் பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரருக்கு அவர் கேள்விப்படிவத்தில் கொடுத்திருக்கும் விலாசத்திற்கு முடிவு தெரிவிக்கப்படும். ஏதாவது பொருட்கள் கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் அப்புறப்படுத்தப்படாதிருப்பின் அவை திரும்பவும் விற்பனை செய்வதற்கு அல்லது வேறுவிதமாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரி வேறுவிதமாக முடிவு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் இப்பொருட்களுக்கு உரிமை கோர முடியாது.

8. முன்னதாக அனுப்பப்பட்ட கேள்விகளை வாபஸ்பெறும் கேள்விதாரர் (அ) கேள்வி முடிவு தேதிக்கு முன் அதை வாபஸ் பெறுவிடின் அல்லது (ஆ) கேள்விப்படிவங்களை கேள்வி முடிவு தேதிக்கு முன் அனுப்பாவிடின் அல்லது (இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் வேண்டப்பட்ட நாளிலிருந்து குறித்த தவணையுள் முழுத் தொகையையும் கட்டி பொருட்களை அகற்றுவிடத்து அவரது வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் பொருட்களை குறித்த கால எல்லையுள் அகற்றத் தவறின் அல்லது மறுப்பின் அவர்கள் தவறியோர் பட்டியலில் சேர்க்கப்படுவதுடன் தங்களது வைப்புப் பணத்தையும் இழப்பர்.

10. மாங்குளம் காணி அபிவிருத்தி அதிகாரி எதுவித கேள்வியுமின்றி ஏதாவது ஒரு கேள்வியை அல்லது முழுக்கேள்விகளையும் தள்ளுபடி செய்வதற்கு அல்லது ஏதாவது ஒரு கேள்வியை அல்லது கேள்வியின் ஒரு பகுதியை ஏற்பதற்கு உள்ள அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளார்.

சி. குமாரசாமி,
காணி அபிவிருத்தி அதிகாரி,
மாங்குளம்.

காணி அபிவிருத்தி அலுவலகம்,
மாங்குளம், 73.08.31.

9-247—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

#### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர் 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆந் தேதி மு. ப. 10.00 மணி வரை பின்வரும் கோல உடைப் பொருட்களை வழங்குவதற்கான பொறியிட்ட கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார் :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | காகி நிற டிறில் 28/29" அகலம் (சன்பொறைஸ்ட்) | | | | 210,000 யார் |
| (2) | சாம்பல் நிற ரகூர் | ,, | ,, | ,, | 41,000 ,, |
| (3) | நீலநிற டிறில் | ,, | ,, | ,, | 2.500 ,, |
| (4) | கறுப்பு நிற ரகூர் | ,, | ,, | ,, | 185,000 ,, |

1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிவரை பொரலஸ்கமுவ, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பிரதம வினியோக உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பத்திரங்களில் கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டும். மீளளிக்கப்படமாட்டாத கட்டணம் 10 ரூபாவையும் மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப் பணம் 100 ரூபாவையும் வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கட்டிக் கேள்விப் பத்திரங்கள் வழங்குவதற்காக, பற்றுச் சீட்டுக்கள் அனுப்பப்பட வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம வினியோக உத்தியோகத்தர்.

வெரகெரை,
பொரலஸ்கமுவை,
1973.08.28.

9-301—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

### புத்தளம் மாவட்டத்திலுள்ள மாதம்பை விநியோக நிலையத்தில் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கும் கையாளுவதற்குமான கேள்விப் பத்திரங்கள்

புத்தளம் மாவட்டத்திலுள்ள மாதம்பை விநியோக நிலையத்தில் பொருட்களை ஏற்றுவதற்கும் மற்றைய வேலைகள் செய்வதற்குமான கேள்விப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட கொந்தருத்துக்காரர்களிடமிருந்தும், கிராமாபிவிருத்திச் சங்கங்களிடமிருந்தும், கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும், கூட்டுறவுத் தொழில் சங்கங்களிடமிருந்தும் 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) அரிசி, மா மற்றைய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுதல், பங்கிடுதல் சம்பந்தமாகவுள்ள சேவைகள்;

(2) அரிசி, மா மற்றைய உணவுப் பொருட்கள் முதலியவற்றை மாதம்பை புகையிரத நிலையத்தில் இருந்து இறக்கி விநியோக நிலையத்திற்கு ஏற்றிச் செல்லுதல்.

2. 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் இந்தக் காரியாலயத்தில் கேள்விப் பத்தி

ரங்கள் வினியோகிக்கப்படும். கொந்தருத்துக்காரர்கள் மேற்கூறிய வற்றிற்கு கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபாய் 25.00 புத்தளம் கச்சேரியிலோ அல்லது வேறெந்த கச்சேரியிலோ செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தக் காரியாலயத்தில் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரமே இணைப்பிரதியுடன் நிரப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாதம்பை வினியோக நிலையத்தில் பொருட்களை ஏற்றிச் செல்லுவதற்கும் கையாளுவதற்குமான கேள்விப் பத்திரங்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் தபாலில் அனுப்பாதவர்கள், புத்தளம் கச்சேரியில் உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ம் திகதி பிற்பகல் 2.10 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப் பத்திரக்காரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

4. காரணம் காட்டாமல் கேள்விப் பத்திரங்களில் ஏதாவதொன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் கேள்விப்பத்திர சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் பாதுகாப்புப் பணமாக ரூபா 250.00 செலுத்துதல் வேண்டும். கேள்விப் பத்திரக்காரர் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவித்தல் கிடைத்த 7 நாட்களுக்குள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரருக்கு அவர் கொடுத்த விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் தெரிந்தெடுக்கப்பட்டதைக் கடிதமூலம் அறிவித்தால் கேள்விப் பத்திரக்காரர் ஏற்றுக்கொண்டார் என்று கருதப்படும். கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுபற்றி கடிதம் பெற்ற ஒருவர் ஒப்பந்தம் எழுதத் தவறுவாராயின், அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழக்க நேரிடும். தேர்ந்தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப் பணம், தேர்ந்தெடுக்கப்பட்டவர் பாதுகாப்புப் பணம் கட்டிய பின்னர் திருப்பிக் கொடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரக்காரர் இலங்கையரையே வேலைக்கு அமர்த்துதல் வேண்டும். கூலியாட்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கென இப்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்கள் இனிமேலும் நடைமுறைக்கு வர இருக்கும் சட்டங்களுக்கு அமையவே இவ்வேலையை முடிப்பதற்கு தரமான வேதனம் வழங்குதல் வேண்டும்.

7. வேறு விபரங்களைப் புத்தளம் பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

எம். எஸ். சி. குணவர்தன,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
புத்தளம் மாவட்டம்.

கச்சேரி,
புத்தளம் 1973.09.01.

9-249—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

## இலங்கை விமானப் படை

1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிவரை கீழ்க்காணும் பொருட்களை விநியோகம்/சேவை செய்வதற்கு பொறியிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இக்கேள்விகள் இதன்கீழ் 2 ஆம் பகுதியில் காட்டப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2, த.பெ. எண் 594, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள இலங்கை விமானப் படைத் தலைமைக் காரியாலயத்திலிருக்கும் கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| (1) விநியோகம்/சேவை | (2) கேள்விப் படிவங்கள் கொடுக்கப்படும் இறுதி நாள் | (3) கேள்வி திறக்கப்படும் திகதி |
|---|---|---|
| (1) திருகோணமலையிலுள்ள தரைப்படை, இலங்கை கடற்படையினருக்குக்ம், சீனன்வாடியிலுள்ள இலங்கை விமானப்படையினருக்கும் மரக்கறி, தேங்காய், பண்ணைப் பிரயோசனங்களை விநியோகித்தல் .. | 4.10.1973 .. | 5.10.1973 |
| (2) திருகோணமலையிலுள்ள தரைப்படை இலங்கைக் கடற்படையினருக்கும் சீனன்வாடியிலுள இலங்கை விமானப் படையினருக்கும், பாண், தேசிய காலை உணவுவகைகள் விநியோகித்தல் .. | 4.10.1973 .. | 5.10.1973 |
| (3) கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப் படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத் துணிகள் சலவை செய்தல் .. .. .. .. .. | 4.10.1973 .. | 5.10.1973 |

ஆ. திருப்பிக்கொடுக்கப்படும் கேள்விக் கட்டுப்பணம் ரூபா 75 ஐத் தனித்தனி ஒவ்வொரு விநியோகம்/சேவைக்கு இத்தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டியபின்னரே கேள்விப் பத்திரங்கள் கொடுக்கப்படும். மேற்கூறப்பட்ட விநியோக/சேவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 2 ஆம் பகுதியில் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

இ. மேலதிக விபரங்களை கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. எச். மெண்டிஸ்,
எயர் கொமடோர்,
விமானப் படைத் தளபதி.

9-323—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

## இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### பாரமான சாதனங்களை ஏற்றியிறக்கிக் கொள்வதற்கான இடம்பெயர் பாரம் தூக்கிகளையும் இழுவண்டிகளையும் வழங்கிக் கொள்வதற்கான கேள்வி

மேற்கூறியவற்றை வழங்கிக் கொள்வதற்கான பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விச் சாதனங்களையும் விவரக் கூற்றுக்களையும் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரிடமிருந்து மீளளிக்கப்படும் காசு வைப்பாக ரூபா 100 கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி.
கொழும்பு 3.

9-326—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

இருபது உருப்படி வனைதற்றொழிலுக்குரிய உதைசில்லுகள் வழங்குவதற்கான கேள்விகளை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 1973.10.03 காலை 10 மணி வரை, கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(3/43)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.03.

9-362—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

மின்தறிப் பாகங்கள் வழங்குவதற்கான கேள்விகளை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 1973.10.15 காலை 10 மணி வரை கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவர் ஏற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் தயவுசெய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1-(3/15)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 01 ந் உ.

9-234—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

**காட்டுத் திணைக்களம்—ஏலவிற்பனை**

மட்டக்களப்பு கல்முனை வட்டாரத்தில் பல இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பல இனங்களைக் கொண்ட மரங்களும், கரத்தைகளும் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 27.9.73 காலை 10 மணிக்கு கல்முனை பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏலவிற்பனைக்கு முன்பதாகவே மரங்களை பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏலவிற்பனைபற்றிய முழு விபரங்களும் கீழ் கையொப்பமிட்டவரிடமோ அல்லது மேற்கூறிய கல்முனைப் பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

டபிளியு. ஜே. ஜே. மேதர்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி, கீ. பி.
மட்டக்களப்பு.

மாவட்ட வனபரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு, 12.7.73.

9-283—14.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 77.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாறறப்படும்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 7.9.73 | வெள்ளி .. | 29.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி .. | 5.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி .. | 11.9.73 | செவ்வாய் . | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி ... | 19.9.73 | புதன் ... | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண் ஓகத்து மீ 18 ந் உ.